**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 431 of 2012**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : பேச்சியம்மாள்** | **Father/Husband's Name : முருகன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 28.10.2025.**

**A1 to A3 absent 317 Cr.P.C PFA. A4 died (C.A)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு, ஏர்மாள்புரம் என்று ஊரில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கடந்த 13 வருடங்களுக்கு முன்பு தேதி , மாதம் ஞாபகமில்லை பழனியில் சாமி கும்பிடுவதற்காக வந்து சாமி கும்பிட்டு விட்டு அடுத்த நாள் ஊருக்கு செல்வதற்காக பேருந்து நிலையத்தில் இரவு 7 மணிக்கு பேருந்து ஏறிக்கொண்டிருந்த போது 2 பேர் என்னை தள்ளி கொண்டு எனது கழுத்தில் இருந்த 32 கிராம் செயினை அத்து கொண்டு சென்றுவிட்டார்கள். அத்து சென்ற நபர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் சொல்கிறேன். நான் அதற்கு பிறகு ஊருக்கு சென்றுவிட்டேன். அதற்கு பிறகு ஒரு மாதம் கழித்து வந்து என் ஊரில் எல்லோரும் செயின் திருடுபோனதை என்னிடம் கேட்டு சத்தம் போட்டார்கள் அதற்கு பிறகு நான் வந்து புகார் கொடுத்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது கணவரும் கையொப்பம் செய்தார். நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது செயினை இடைக்காலமாக பெற்று சென்றேன். செயினை பெற்றுச்செல்ல தாக்கல் செய்த மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. நான் கோவிலுக்கு வந்த போது யார் வீட்டில் தங்கியிருந்தேன் என்றால் எனது கொழுந்தன் வீட்டில் தங்கியிருந்தேன். நான் கோவிலுக்கு செல்வதற்கு முன்பு எனது

கொழுந்தன் வீட்டில் தங்கியிருந்தேனா என்றால் கோவிலுக்கு சென்றுவிட்டு மறுநாள் வரை எனது கொழுந்தன் வீட்டில் தங்கிவிட்டு பஸ் ஏற சென்றேன். நான் பஸ் ஏற செல்வதற்கு முன்பு எத்தனை மணி வரை கொழுந்தனார் வீட்டில் இருந்தேன் என்றால் பஸ் ஏற செல்வதற்கு முன்பு 7 மணி வரை கொழுந்தனார் வீட்டில் இருந்தேன். எனது கொழுந்தனார் வீட்டில் நான் மட்டும் இருந்தேனா என்னுடன் வந்த நபர்களும் இருந்தார்களா என்றால் எல்லோரும் இருந்தோம். நான் பழனி பஸ் நிலையத்திற்கு வரும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 6 மணி இருக்கும் அப்போது பேருந்து போய்விட்டது அதனால் 7 மணிக்கு வந்த பேருந்தில் ஏறினேன்.

3. நான் பேருந்தில் இடம்பிடிக்க ஏறினேன் என்று புகாரில் சொல்லியுள்ளதில் எந்த வாசலில் ஏறினேன் என்றால் நான் முன் வாசலில் ஏறினேன் என் கணவர் பின் வாசலில் ஏறினார். பஸ்ஸில் ஏறும் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் எத்தனை பேர் என்று தெரியவில்லை. சுமார் 20–30 பேர் இருந்தார்களா என்றால் ஆமாம். நகை காணாமல் போனது பேருந்தில் ஏறிய பின்பு தெரிந்ததா என்றால் ஏறும் போதே என்னை தள்ளிவிட்டு அத்துவிட்டு சென்றுவிட்டார்கள். நகை காணாமல் போன தேதியன்று புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம் உடனே புகார் கொடுத்தோம். நான் கொடுத்த புகாருக்கு எனக்கு அறிக்கை கொடுத்தார்களா என்றால் ஆமாம் கொடுத்தார்கள். நான் முதலில் கொடுத்த புகாரில் செயினை காணவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றாலும் அத்து சென்றுவிட்டார்கள் என்று சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் முதலில் கொடுத்த புகாரில் 2 நபர்கள் செயினை அத்து கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதலில் கொடுத்த புகாருக்கு போலிசார் சார்பு ஆய்வாளர் ஓம் பிரகாஷ் என்பவர் விசாரித்து சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் 2 பேரும் நான் சொன்னது போல் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. சந்தேகத்தின் பேரில் எதிரிகளை பிடித்து வைத்துக்கொண்டு காலதாமதமாக என்னை வரச்சொல்லி ஒரு புகார் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் சரியல்ல. என்னை வரச்சொல்லி அதற்கு பிறகு தான் புகார் பெற்று வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிரி  தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் 7 மணிக்கு வீட்டில் இருந்தேன் என்றாலும், நான் அப்போதே நகை காணவில்லை மகாலிங்கம் வீட்டில் வைத்து சொல்லியிருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் 7 மணிக்கு பேருந்து நிலையம் வரவில்லை என்றாலும் சரியல்ல. மற்ற நபர்களுக்கு தெரியகூடாது என்பதற்காக ஊருக்கு போய்விட்டு வந்து பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், 3ம் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

1, 2 எதிரிகள் தரப்பில் தரப்பட்ட குறுக்குவிசாரணை 3ம் எதிரி தரப்பில் சேர்த்து கொள்ளப்பட்டது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.10.28 18:22:30 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 431 of 2012**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : முருகன்** | **Father/Husband's Name : சண்முகவேல்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 28.10.2025.**

**A1 to A3 absent 317 Cr.P.C PFA. A4 died (C.A)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் ஏர்மாள்புரம் என்ற ஊரில் குடியிருந்து, கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அ.சா.1 பேச்சியம்மாள் என்னுடைய மனைவி ஆவார். 2012ம் வருடம் 1வது மாதம் தேதி ஞாபகமில்லை, நாங்கள் குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்து விட்டு மறுநாள் சாயங்காலம் ஊருக்கு புறப்படுவதற்கு பழனி பஸ் நிலையம் வந்த போது இரவு 7 மணிக்கு கன்னியாகுமரி பேருந்து வந்தது அப்போது எனது மனைவி முன்பக்கமாக இடம்பிடிக்க ஏறினார். நான் பின்பக்கமாக ஏறினேன். அப்போது லைட் ஆப் ஆகி விட்டது. அப்போது எனது மனைவி கழுத்தில் இருந்த சுமார் 3 பவுன் செயினை காணவில்லை என்று சத்தம் போட்டார். எனது மனைவி கழுத்தில் சிறிய ரத்த காயம்இருந்தது. அப்போது காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். ரசீது கொடுத்தார்கள். அதற்கு பிறகு 3வது மாதம் பழனி வந்து புகார் கொடுத்தோம். அதற்கு பிறகு எனது மனைவி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து செயினை இடைக்காலமாக பெற்று சென்றார். திருடி சென்ற நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. பஸ்ஸில் நான் முன்பக்க வாசலில் ஏறினேன் என்றாலும் எனது மனைவி பின்

பக்க வாசலில் ஏறினார் என்றாலும் சரிதான். பஸ் ஏறும் போது சுமார் 20–30 பேர் இருந்தார்கள் என்றால் இல்லை டிரைவர் பஸ்ஸை நிறுத்திவிட்டு போய்விட்டார். இருட்டில் தெரியவில்லை. நான் முன் பக்க வாசலில் ஏறியதால் பின்பக்கம் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தன்று புகார்கொடுத்ததாக சொல்வதில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் இல்லை ரசீது மட்டும் கொடுத்தார்கள். முதலில் சம்பவத்தன்று கொடுத்த புகாரில் நகை காணவில்லை என்று தான் புகார் கொடுத்தோம் என்றால் முதலில் தெரியாமல் அப்படி கொடுத்தோம். கழுத்தில் காயம் ஏற்பட்டது என்று சொல்வதில் எனது மனைவி மருத்துவ சிகிச்சை பெற்றாரா என்றால் இல்லை. எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. 2 மாதம் கழித்து எனது மனைவியை வரச்சொல்லி சந்தேகத்தின் பேரில் இருந்த எதிரிகளை வைத்து கொண்டு எனது மனைவியிடம் புகார் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் மனைவிக்காக பொய்சாட்சியம் சொன்னேன் என்றாலும் சரியல்ல.

<u>3ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் 7 மணிக்கு வீட்டில் இருந்தேன் என்றாலும், நான் அப்போதே நகை காணவில்லை மகாலிங்கம் வீட்டில் வைத்து சொல்லியிருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் 7 மணிக்கு பேருந்து நிலையம் வரவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், 3ம் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

1, 2 எதிரிகள் தரப்பில் தரப்பட்ட குறுக்குவிசாரணை 3ம் எதிரி தரப்பில் சேர்த்து கொள்ளப்பட்டது.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.10.28 18:22:36 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 431 of 2012**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : மகாலிங்கம்** | **Father/Husband's Name : சண்முகவேல்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 28.10.2025.**

**A1 to A3 absent 317 Cr.P.C PFA. A4 died (C.A)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனியில் குடியிருந்து, வேன் டிரைவராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2012ம் ஆண்டு தேதி , மாதம் ஞாபகமில்லை, புகார் கொடுத்த அன்று நகை காணாமல் போனது சம்பந்தமாக பழனி நகர் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். **பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 26.03.2012ம் தேதி 22.45 மணிக்கு நானும், தண்டபாணி என்பவரும் பழனி பேருந்து நிலையத்திற்கு வந்த போது போலிசார் நகை திருட்டு வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை படம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தார்கள் என்றும் , அதில் நானும், தண்டபாணியும் கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. போலிஸ் விசாரணையில் எனது அண்ணன் மனைவி வீட்டில் இருக்கும்

போதே 7 மணிக்கு நகை காணவில்லை என்று சொன்னார் என்றும், நகை காணாமல் போனதாக என்னிடம் ஏற்கனவே சொன்னார் என்று  சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.10.28 18:22:47 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 431 of 2012**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : தண்டபாணி** | **Father/Husband's Name : முருகவேல்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 28.10.2025.**

**A1 to A3 absent 317 Cr.P.C PFA. A4 died (C.A)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனி, அண்ணாநகரில் குடியிருந்து, வேன் டிரைவராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2012ம் ஆண்டு தேதி , மாதம் ஞாபகமில்லை, பழனி பேருந்து நிலையத்தில் வைத்து போலிசார் வரைபடம் வரைந்து கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். பேருந்து நிலையத்தில் நகை திருடு போனது சம்பந்தமாக கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. நான் பேருந்து நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.10.28 18:22:55 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

Previous Examination date –

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 431 of 2012**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : இக்பால்** | **Father/Husband's Name : அப்துல் கபூர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 28.10.2025.**

**A1 to A3 absent 317 Cr.P.C PFA. A4 died (C.A)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பெரியகடைவீதியில் குடியிருந்து, போட்டோ ஸ்டுடியோ வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மதன் என்ற செல்வகுமார் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் சதிஷ்குமார் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் 27.03.2012 ம் தேதி 14.00 மணிக்கு உள்ள அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2012ம் வருடம்,தேதி மாதம் ஞாபகமில்லை, நானும் எனது நண்பர் முகமது இகையா என்பவரும் VK மில்ஸ்க்கு ஒரு வேலையாக சென்றுவிட்டு பழனி மெயின் பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது கொடைக்கானல் செல்லும் ரோட்டுக்கு அருகில் சார்பு ஆய்வாளர் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார். அப்போது எங்கள் வாகனத்தையும் நிறுத்தினார்கள். நாங்கள் வாகன ஆவணத்தை உரிமத்தை காண்பித்தோம். எங்களுக்கு முன்பாக இரண்டு பேர் வந்த வேறொரு வாகனத்தை செக் பண்ணி கொண்டிருந்தார்கள்.அவர்களிடமிருந்து செயின் திருடு போனதாக வாங்கினார்கள் அதில் சாட்சிகளாக எங்களை கையொப்பம் செய்யச்சொன்னார்கள் கையொப்பம் செய்தோம். அவர்களில் ஒருவர் கையில் கத்தி வைத்திருந்தார். **மதன் என்ற செல்வகுமார் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சதிஷ்குமார் என்பவரின்**

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.10.28 18:23:14 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.